THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

Calender : **CC.No.26/2020** **PW.3**
Miscellaneous :
Preliminary Register :

STATEMENT OF WITNESS
Name :தேசிங்ராஜா
Father's Name :சிவனாண்டி
Village :
Taluk :
Calling :
Religion :
Age : Date: 29.05.2024

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused present)**

<u>**முதல் விசாரணை**</u> :-

1. நான் ராமசந்திராபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். (**சாட்சி எதிரியை பார்த்து தெரியும் என்று அடையாளம் காட்டுகிறார்**). விபத்தில் காயம்பட்ட வீரபாண்டி எனது மாமா ஆகும். 02.01.2020 தேதி காலை 11.30 மணிக்கு இசக்கியம்மன் கோவிலில் இருந்து எனது மாமா செல்போனில் இருந்து போன் வந்தது. எனது மாமாக்கு விபத்து ஏற்பட்டதாக கூறினார்கள். நான் எனது அண்ணனுடைய Swift காலை எடுத்துக்கொண்டு திருக்குறுங்குடியில் இருந்து மாவடி செல்லும் வழியில் உள்ள இசக்கியம்மன் கோவில் அருகே உள்ள சம்பவ இடத்திற்கு சென்றேன். எனது மாமா மற்றும் எதிரி ஆகியோர்களுக்கு விபத்து ஏற்பட்டிருந்தது. காயம்பட்ட எனது மாமாவை களக்காடு பார்வதி நர்சிங் ஹோமிற்கு சிகிட்சைக்காக அழைத்து சென்றோம். எனது மாமாவிற்கு எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

2. நான் சம்பவ இடத்திற்கு வந்தபோது சுமார் 20 நபர்கள் கூடியிருந்தார்கள். பார்வதி நர்சிங் ஹோமிற்கு சென்றபோது எனது மாமா வீரபாண்டி மயக்கமாக நிலையில் இருந்தாரா என்றால் வலி தாங்காமல் துடித்துக்கொண்டிருந்தார். சம்பவ இடத்திற்கு எனது

மாமா இருசக்கர வாகனத்தில் தான் சென்றிருந்தார். நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது ஒரு கார் நின்று கொண்டிருந்தது என்றால் சரியல்ல. எனக்கு போன் மூலம் தகவல் வரவில்லை என்றாலும், நான், அ.சா.1 வீரபாண்டியனை பார்வதி நர்சிங் ஹோமிற்கு அழைத்து செல்லவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 வீரபாண்டியனின் மகளை தான் நான் திருமணம் செய்துள்ளேன். அ.சா.1 வீரபாண்டியன் எனது மாமனார் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | **CC.No.26/2020** | **PW.4** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| Name | : | முத்துலெட்சமி |
| Husband Name | : | தேசிங்குராஜா |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | Date: 29.05.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused present)**

**<u>முதல் விசாரணை</u>** :-

1. நான் மாவடியில் குடியிருந்து வருகிறேன். நான் யூனியன் அலுவலகத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். (**சாட்சி எதிரியை பார்த்து தெரியும் என்று அடையாளம் காட்டுகிறார்**). விபத்தில் காயம்பட்ட வீரபாண்டி எனது அப்பா. 02.01.2020 தேதி காலை 11.30 மணிக்கு மலையடிபுதூரில் இருந்து அருகே உள்ள குளம் பக்கத்தில் உள்ள இசக்கியம்மன் கோவில் பூசாரி போன் மூலம் எனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டது என்று தகவல் சொன்னார். எனது கணவர் தேசிங்குராஜாவை எனது அண்ணனிடம் காரை வாங்கி கொடுத்து சம்பவ இடத்திற்கு அனுப்பி வைத்தேன். நானும் எனது அண்ணன் கோபாலும் எனது அப்பா சிகிட்சை பெற்று வந்த களக்காடு பார்வதி நர்சிங் ஹோமிற்கு சென்று காயம்பட்ட எனது அப்பாவை பார்த்தேன். எனது அப்பாவிற்கு வலது கை மற்றும் வலது காலில் காயம் ஏற்பட்டு அவரது காலில் அறுவை சிகிட்சை செய்யப்பட்டது. எதிரி வேகமாக வாகனத்தை ஓட்டிவந்து எனது அப்பா மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார் என்றும் எனது அப்பா தகவல் சொன்னார். போலீசார் எனது அப்பாவை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் நானும் எனது அண்ணன் கோபாலும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.

இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2. நானும், கோபாலும் திருக்குறுங்குடி காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தோம் என்றால் மருத்துவமனையில் வைத்து கையொப்பம் செய்தோம். அ.சா.1 வீரபாண்டியன் எனது தந்தை என்பதால் அவருக்கு வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.